அசல் வழக்கு எண்: 61/2022

DEPOSITION OF WITNESS: D.W.1

| | |
|---|---|
| பெயர் | நடராஜன் |
| தந்தை பெயர் | ராமநாதன் |
| வயது | 70 |
| கிராமம் | காட்டுதெள்ளூர் |
| வட்டம் | சேத்துப்பட்டு |
| தொழில் | விவசாயம் |

The Witness sweared under Oaths Act 1969 on this the day of 06th day of April 2026

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் 2ம் பிரதிவாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன். எனது முதல் விசாரணை சாட்சியத்திற்கு நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். 20.09.2004 1ம் பிரதிவாதி எல்லம்மாளுக்கு அவரது கணவர் எத்திராஜ் கவுண்டர் எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரத்தின் கணினி பதிவிறக்க நகல் **பி.வா.சா.ஆ.1** ஆகவும் 15.07.2021ம் தேதியிட்ட சுள்ளி பெயரில் உள்ள சிட்டா கணினி பதிவிறக்க நகல் ( எண் 3690) **பி.வா.சா.ஆ.2** ஆகவும் 27.06.2023ம் தேதியிட்ட எலத்திரியான் போளூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அசல் வழக்கு எண் 267/2016-ல் தாக்கல் செய்த கூடுதல் பதிலுரை சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.3** ஆகவும் 22.02.2021ம் தேதி 2ம் பிரதிவாதியின் வழக்கறிஞர் வாதி எலத்திரியான் போளூர் சார்பதிவாளர், மீனா மற்றும் சேட்டு ஆகியோர்களுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் **பி.வா.சா.ஆ.4** ஆகவும் 24.02.2021ம் தேதி வாதி கையொப்பமிட்ட அஞ்சலக ஒப்புகை அட்டை அசல் **பி.வா.சா.ஆ.5** ஆகவும் 24.02.2021ம் தேதி மீனா கையொப்பமிட்ட அஞ்சலக ஒப்புகை அட்டை அசல் **பி.வா.சா.ஆ.6** ஆகவும் 09.09.2021 வில்லங்க சான்று கணினி பதிவிறக்க நகல் **பி.வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்ய வேண்டுகிறேன். தாவாவை தள்ளுபடி செய்ய பிரார்த்திக்கிறேன். (பி.வா.சா.ஆ.1 மற்றும் 2 ஆகியவை வாதி வழக்கறிஞர் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது.)

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கானது வாதி எல்லம்மாள் மற்றும் சுள்ளி ஆகியோர் நிலம் தகறாறு செய்ததாக கூறி தாக்கல் செய்துள்ளார். 2ம் பிரதிவாதி சுள்ளி எனது மனைவி ஆவார். எனது மனைவி சுள்ளி உடல்நிலை சரியில்லாமல் வீட்டில் உள்ளார். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தை எங்கள் வழக்கறிஞர் தயார் செய்து

வைத்திருந்தார் நான் சென்று கையெழுத்து செய்தேன். எனது நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியும். என் மாமனார் எத்திராஜ் உடன் பிறந்தவர்கள் 5 பேர் ஆவார்கள். அவர்கள் பெயர் பெருமாள் கவுண்டர், பெரியண்ணா கவுண்டர், முத்தாள் கவுண்டர், என் மாமனார் எத்திராஜ் கவுண்டர் மற்றும் ராம கவுண்டர் ஆகும். வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 அடிப்படையில் பெருமாள் கவுண்டர் சொத்துகள் கிரையம் பெற்றார் என்றால் சரிதான். மேற்கண்ட சொத்துக்களை எனது மாமனார் எத்திராஜ் கவுண்டர் தனது சகோதரர்களுடன் வா.சா.ஆ.5 பாக பத்திரம் மூலம் பாகம் பிரித்து கொண்டார்கள் என்றால் சரிதான். அந்த பாகம் மூலம் எனது மாமனாருக்கு டி–ஹெட்யூல் சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். என் மாமனார் எத்திராஜ் கவுண்டர் ராம கவுண்டர் மனைவி கிருஷ்ணவேனி வகையறாவிடம் 17.09.1997 ம் தேதி வா.சா.ஆ.6 மூலம் சொத்துக்கள் கிரையம் பெற்றார் என்றால் சரிதான். மேற்கண்ட வா.சா.ஆ.5 பாக சொத்துக்கள் மற்றும் வா.சா.ஆ.6 கிரைய சொத்துகள் இந்த தாவா சொத்துக்களில் கட்டுப்பட்டுள்ளன என்றால் சரிதான். நான் 2ம் பிரதிவாதி சுள்ளியை திருமணம் செய்யும் போது எனது மாமனார் எத்திராஜ் கவுண்டருக்கு ஆண் வாரிசு யாரும் கிடையாது என்றால் சரிதான். நான் திருமணம் முடிந்த பின் எனது மனைவி வீட்டிலேயே இருந்து வந்தேன் என்றால் சரிதான். எனது மாமனார் எத்திராஜ்க்கு ஆண் வாரிசு இல்லாததால் நான் எனது மனைவி மற்றும் மாமியார் சேர்ந்து அவருக்கு 2வதாக வாதியின் தாயார் சின்னகுழந்தையம்மாளை திருமணம் செய்து வைத்தோம் என்றால் நாங்கள் திருமணம் செய்து வைக்கவில்லை. எனது மாமனார் எத்திராஜ் கவுண்டர் அவராகவே திருமணம் செய்து கொண்டார். அதில் வந்த பிரச்சனை காரணமாக நானும் எனது மனைவி சுள்ளியும் தனியாக பிரிந்து வந்துவிட்டோம் என்றால் சரிதான். அதன் பின்னர் நாங்கள் காட்டுதெள்ளூர் கிராமத்தில் வசித்து வந்தோம் என்றால் சரிதான். ஏதாவது விஷேசம் என்றால் மட்டும் எங்கள் மாமனார் வீட்டிற்கு சென்று வருவோம். எனது மாமனார் எத்திராஜ்க்கும் அவரது 2ம் மனைவி சின்னகுழந்தையம்மாளுக்கும் வாதி பிறந்தார் என்றால் சரிதான். எத்திராஜ் கவுண்டர் தனக்கு பாத்தியமான சொத்துக்களை வா.சா.ஆ.7 தான செட்டில்மெண்ட் மூலம் வாதிக்கு கொடுத்தார் என்றால் எனக்கு அது தெரியாது. அதன் பின்னர் 2004ம் வருடம் எத்திராஜ் கவுண்டர் அந்த தான பத்திரத்தை ரத்து செய்ய எங்களை அழைத்த போது தான் அது குறித்து எனக்கு தெரிய வந்தது. 2003ம் வருடம் வாதி பெயரில்

தாவா சொத்து தானமாக கொடுக்கப்பட்ட பின்னர் அவரும் அவரது தாயாரும் தான் அந்த சொத்துக்களில் பயிர் செய்து அனுபவித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. எத்திராஜ் கவுண்டர் தான் அவர் இறக்கும் வரை பயிர் செய்தார். அதன் பின்னர் 2004 ம் வருடம் தான பத்திரத்தை ரத்து செய்த அதே நாளில் எத்திராஜ் கவுண்டர் எல்லம்மாளுக்கு தாவா சொத்தில் கட்டுப்பட்ட 4 சொத்துக்களை பொருத்து கிரையம் ஏற்படுத்திக்கொடுத்தார். 2003 ம் வருடம் எத்திராஜ் கவுண்டருக்கு சுமார் 60 வயதுக்கு மேல் இருக்கும். எத்திராஜ் கவுண்டர் 2 வது திருமணம் முடித்த போது அவரது வயது என்னவென்று எனக்கு தெரியாது. எத்திராஜ் கவுண்டர் 1970 க்கு மேல் தான் 2 வது திருமணம் செய்தார். அப்போதே நாங்கள் தனியாக சென்றுவிட்டதால் தாவா சொத்துக்களில் யார் பயிர் செய்தார்கள் என்ற விவரம் எங்களுக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. உண்மையில் 2003 ம் வருடம் வாதி பெயரில் தாவா சொத்துகள் தானம் கொடுக்கப்பட்ட பின்னர் அவை வாதி அனுபவத்திற்கு வந்து பட்டா மாற்றப்பட்டு அவர்கள் தான் அதில் பயிர் செய்து வந்தார்கள் என்றால் சரியல்ல. எனது மாமனார் எத்திராஜ் கவுண்டர் 2016 வருடம் காலமானார். தேதி, மாதம் ஞாபகம் இல்லை. 2004 ம் வருடம் எத்திராஜ் கவுண்டர் வாதி பெயரில் கொடுத்த தானத்தை வா.சா.ஆ.14 ன் மூலம் ரத்து செய்தது சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. அதே தேதியில் வா.சா.ஆ.15 மூலம் மேற்கண்ட சொத்துக்களை எனது மாமியார் எல்லம்மாளுக்கு கிரையம் செய்து கொடுத்தது சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.15 கிரையம் மூலம் கிடைத்த சொத்துக்களை தான் எல்லம்மாள் வா.சா.ஆ.16 2 ம் பிரதிவாதி சுள்ளிக்கு தான செட்டில்மெண்ட் கொடுத்தார் என்றால் சரிதான். மேற்கண்ட சட்ட புறம்பான வா.சா.ஆ.14 மற்றும் 15 அடிப்படையில் கிடைத்த சொத்துக்களை வா.சா.ஆ.16 மூலம் தானம் கொடுத்ததால் 2 ம் பிரதிவாதி பெயரில் உள்ள தான செட்டில்மெண்ட் சட்டப்படி செல்லதக்கது அல்ல என்றால் சரியல்ல. சுள்ளி பெயரில் உள்ள சொத்துக்கள் பட்டாவில் உட்பிரிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. 2012 ம் வருடமே சுள்ளி பெயரில் பட்டா மாறுதல் செய்யப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் பட்டா எண் 45 தற்போதும் வாதி பெயரில் உள்ளது என்றால் சரிதான். மேற்கண்ட பட்டா எண் 45 க்கான கணினி பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.17** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த பட்டாவானது வாதி ஆட்சேபணை செய்ததால் சுள்ளி பெயரில் உள்ள பட்டாவை ரத்து செய்து வாதி பெயரில் மாற்றிக்கொண்டார்கள். இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள

பி.வா.சா.ஆ.2 பட்டாவானது எவ்வித விசாரணையும் இன்றி எங்கள் பெயரில் தவறாக ஏற்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. நாங்கள் சட்டப்படி தான் அந்த பட்டாவை வாங்கினோம். ஆனால் அதன் பின்னர் அதை ரத்து செய்துவிட்டார்கள். எங்கள் பெயரில் பட்டா ஏற்பட்டவுடன் வாதி தனது பெயரில் தான் தான செட்டில்மெண்ட் மற்றும் அந்த சொத்துக்கள் அனுபவம் உள்ளது என ஆட்சேபணை செய்ததால் மீண்டும் வாதி பெயரில் பட்டா மாற்றப்பட்டு தற்போது வரை அவர் பெயரில் உள்ளது என்றால் சரிதான். ஆனால் தவறாக மாற்றப்பட்டுள்ளது. மேற்கண்ட வாதி பெயரில் மீண்டும் ஏற்பட்ட பட்டாவை எங்கள் பெயரில் மாற்ற நாங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் வருவாய் துறை அலுவலகத்தில் மனு செய்தோம். ஆனால் அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. அந்த மனு நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 கிரைய பத்திரத்தில் உள்ள சொத்து விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. அந்த சொத்துக்கள் சர்வே எண் 111/1ல் 27 செண்ட், 111/2ல் 10 செண்ட், 174/3ல் 35 செண்ட், 175/3ல் 35 செண்ட் ஆகும்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி –** வாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இனங்க ஒத்திவைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்<br><br>Sd/– S. Senthilbabu,<br>சார்பு நீதிபதி,<br>போளூர். |